

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தருமபுரி கிழக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் தடங்கம் சுப்பிரமணி ,கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் எம்.பி. செந்தில் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு கேந்திரிய வித்யாலயாக்களில் பணிபுரியும்

# தமிழ், இந்தி, சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு ஒன்றிய கல்வி அமைச்சர் பதில்!



புதுடெல்லி, மார்ச் 26 -

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. கல்வித் துறை தொடர்பான சில முக்கிய வினாக்களை எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.

“நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையின் கீழ் கற்பிக்கப்படும் மொழிகளின் விவரங்கள் மாநில வாரியாக என்னென்ன?

இந்த மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள்;

இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி அல்லாத இந்திய மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் மாநில வாரியாக என்ன?

தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தற்போது பணிபுரியும் தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாணவர்களுக்கு அந்தந்த தாய்மொழிகளில் கற்பிக்க கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஏதேனும் திட்டங்கள் வகுத்துள்ளனவா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்?”

ஆகிய இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வித் துறையின் இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அளித்த பதில் வருமாறு:-

“தேசிய கல்விக் கொள்கையின் பத்தி 4.13 இல், அரசியலமைப்பு விதிகளைக் கருத்தில்க் கொண்டு மக்கள், மாநிலங்கள் மற்றும் ஒன்றியத்தின் விருப்ப ங்களை மற்றும் பன்மொழித் தன்மையை மேம்படுத்துவதன் அவசியத்தையும், தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதையும் மனதில் கொண்டு மும்மொழிக் கொள்கை தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கூறுகிறது.

எனினும், மும்மொழிக் கொள்கை அதிக நெகிழ்வுத் தன்மையுடையதாக இருக்கிறது. அதாவது எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியும் திணிக்கப்ப டாது. மூன்று மொழிகளில் குறைந்தது இரண்டு இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டதாக இருக்கும் வரை குழந்தைகள் கற்றுக் கொள்ளும் மூன்று மொழிகளும் மாநிலங்களுடைய தேர்வாகவும் இன்னும் சொல்லப் போனால் நிச்சயமாக மாணவர்களின் விருப்பங்களாக இருக்கும்,

குறிப்பாக, தாங்கள் படிக்கும் மூன்று மொழிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை மாற்ற விரும்பும் மாணவர்கள், மேல்நிலைப் பள்ளியின் இறுதிக்குள் (இலக்கிய மட்டத்தில் இந்தியாவின் ஒரு மொழி உட்பட) அடிப்படைத் தேர்ச்சியை நிரூபிக்க முடிந்தால், 6 அல்லது 7 ஆம் வகுப்பில் அவ்வாறு செய்யலாம்.

NEP 2020 இன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது இது இந்தியாவில் மொழிக் கல்வி குறித்த முன்னோக்குகளுக்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஒருமொழி பயிற்றுவிக்கும் 23280 பள்ளிகளும், இரு மொழி பயிற்றுவிக்கும் 20693 பள்ளிகளும், மும்மொழி பயிற்றுவிக்கும் 211114 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. மத்திய பிரதேச மாநிலத்தில் ஒரு மொழி பயிற்றுவிக்கும் 11428 பள்ளிகளும் , இருமொழி பயிற்றுவிக்கும் 43596 பள்ளிகளும், மும்மொழி பயிற்றுவிக்கும் 68388 பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் ஒரு மொழி பயிற்றுவிக்கும் 21725 பள்ளிகளும், இரு மொழி பயிற்றுவிக்கும் 35092 பள்ளிகளும், மும்மொழி பயிற்றுவிக்கும் 1905 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. கல்வி உரிமைச் சட்டத்தில் (RTE) வரையறுக்கப்பட்டுள்ளபடி கேந்திரிய வித்யாலயாக்களுக்களுக்கு “குறிப்பிட்ட வகை” என்ற அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகள் சீரான கல்வித் திட்டத்தைக் கொண்டிருக்க வேண் டும் என்ற கட்டளையுடன் நிறுவப்பட்டுள்ளன.

எனவே, அனுமதிக்கப்பட்ட மொழி ஆசிரியர் பதவிகள் இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் மட்டுமே. இருப்பினும், கேந்திரிய வித்யாலயாவிற்கான கல்விச் சட்டத்தின் பிரிவு 112 இன் படி, ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை விருப்பமுள்ள மாணவர்களுக்கு பிற மொழிகளைக் கற்பிப்பதற்கான ஒரு வழிமுறை உள்ளது. இந்த விதியின்படி, 15 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் தேர்வுசெய்தால், ஒரு ஆசிரியரை பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம்.

தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயாக்களில் தமிழ் கற்பிப்பதற்காக பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் 24 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். கூடுதலாக, 21 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் மொழியை கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்காக தமிழ்நாட்டில் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பான தமிழ் மெய்நிகர் அகாடமி (TVA) மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் 86 இந்தி மற்றும் 65 சமஸ்கிருத ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்” என்று பதிலளித்துள்ளார்.



மதுரை மாநகர் மாவட்டம் வடக்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பாக மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, இன்பா ஏ.என்.ரகு, சௌந்தரராஜன் ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கோவி. செழியன் கண்டன உரையாற்றினார்.உடன் கழக நிர்வாகிகள் இளைஞரணியினர், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.



கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாநகரம் திரேஸ்புரம் பகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க சிறப்பு தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் வழங்கினார். உடன் ஆனந்தசேகரன், செல்வராஜ், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், நிர்மல்ராஜ், துறைமுகம் ஃப்ளோரன்ஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி திமுக இளைஞரணி சார்பாக ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கள்ளிக்குடி சத்திரத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், திருச்சி என்.சிவா எம்.பி., முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையேற்று கண்டன உரை நிகழ்த்தினார். உடன் நாகூர் கனி, ஜி.பி.ராஜா, வி.விமல், மதன்குமார், ராமமூர்த்தி கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

